RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் பார்வையில் பணிமகளிர்

**பா. முத்துச்சாமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா

# Women Workers from the Perspective of Rajam Krishnan

**P. Muthusamy [a, *]**

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai-600030, India

* Corresponding Author:
samymuthu13@gmail.com

Received: 30-11-2025
Revised: 23-02-2026
Accepted: 11-03-2026
Published: 16-03-2026

Check for updates

## ABSTRACT

Rajam Krishnan is one of India's finest women writers. Women face a lot of problems in the society. At every moment there have been some who have been able to raise a voice against them. Rajam Krishnan was one of the most courageous people to register his protest in writing like the Sangam poet Avvaiyar. The gist of the article is that he highlights the problems faced by working women in his view.

**Keywords:** Rajam Krishnan, Female writer, Realistic short stories, Women's education, Women's liberation, Gandhian thought.

## முன்னுரை

பெண்களுக்குக் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்ததால் பணிபுரியும் இடத்தில் வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினர். கல்வியறிவற்ற பெண்கள் உடல் உழைப்பில் ஈடுபட்டனர். அலுவலகப் பணியோ, கூலிவேலையோ எதுவாக இருப்பினும் அதைச் செய்ய வந்த பெண்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் ஏராளம். இராஜம்கிருஷ்ணன் புதினங்களில் காணப்படும் இப்பணி மகளிரின் சிக்கல்களைப் பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விவசாய மகளிர், மீனவ மகளிர், உப்பளத் தொழிலாளர், தீப்பெட்டித் தொழிலாளர், அலுவலகப் பணியாளர், மக்கள் தொடர்புச் சாதனங்களில் மகளிர் போன்ற தலைப்புகளில் மகளிரின் நிலைப்பாடுகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## விவசாய மகளிர்

அன்றாடம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்துவதே கடினமாக உள்ள நிலையில் ஆண்களோடு சேர்ந்து பணியாற்றும் விவசாயத் தொழிலில், பெண்ணின் உழைப்பு குறைவானதாகவே மதிக்கப்படுகிறது. உழவோட்டுவதைத் தவிர ஏனைய அனைத்துப் பணிகளையும் செய்கிறாள். உழவோட்டும் ஆணுக்கு ஒரு நாளைக்கு ஆறு மணி நேர உழைப்புக்கு வழங்கப்படும் கூலி இவளுக்கு பத்து மணி நேர வேலைக்குக் கூட வழங்கப்படுவதில்லை. இந்த வித்தியாசம் பெரிய பண்ணைகளில் கொஞ்சம் குறையலாம். சிறு நில உடமையாளர், அதுவும் சொந்த நிலங்களில் தாமே இறங்கி வேலை செய்யும் பெண்கள், ஒருவருக்கொருவர் என்று பங்கு போட்டுக் கொண்டு நடவு, அறுவடை என்று உழைக்கும்போது, குறைந்த கூலியிலேயே நிறைவு செய்கின்றனர். நிலவுடமை பெண்களின் பெயரில் இருப்பது மிக மிக அபூர்வமாகவே இருந்துள்ளது.

பெண்களின் உழைப்பிற்கு ஆண்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாத நிலையில், பணிக்குச் செல்லும் இடங்களில் அங்குள்ள ஆண்களால் இவர்களின் உழைப்பை மட்டுமன்றி, கற்பையும் சுரண்டும் நிலை உள்ளது. வயல்களில் பயிர்த் தொழில் செய்து, வீடுகளில் எடுபிடி வேலைகளும் செய்து, உழைத்துப் பிழைக்கும் ஏழைப் பெண்கள், தங்களுடைய சிறிய வருவாய்

காரணமாக ஆண்களின் இச்சைக்கு ஆளாக நேரிடுகிறது. இப்பிரச்சினையை இராஜம்கிருஷ்ணின் புதினங்கள் சுட்டத் தவறவில்லை.

“நீங்க அம்மாட்டச் சொல்லிடாதீங்கையா?ன்னு குழைஞ்சு கெஞ்சினா, அட அவ வீட்டுக்கு வெளில எப்படியும் இருக்கட்டும் அது சொந்த வாழ்க்கை இங்கேயே. . .ன்னா”[1]

இந்த உரையாடலில் வேலைக்காரியின் மீது பழியைப் போட்டுத்தான் தப்பித்துக் கொள்ளும் குடும்பத் தலைவனின் மனநிலை வெளிப்படுகிறது. இந்த புதினங்களில் கற்புக் கோட்பாடும், ஒழுக்க நெறிப்பிறழ்வும் மேல் மட்டத்து மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள அளவு அடிமட்டத்து மக்களிடம் முக்கியத்துவம் பெறவில்லை என்பதற்குக் காரணம் அவர்களுடைய வாழ்க்கை முறையே எனலாம்.

## மீனவ மகளிர்

கடலிலே உடற்பாடுபட்டு வரும் தொழிலாளிக்கு நிச்சயமானதொரு வருவாயில்லை. ஆண், பெண் இருபாலரும் மீன்பிடித்தொழில் களத்தில் உழைத்தாலும் உழைப்பிற்கேற்ற வருவாயை ஈட்ட இயலாததோடு வறுமையைப் போக்க இயலாத காரணத்தால் அச்சமுதாய ஆண்கள் தற்காலிக நிவாரணமாக நாடுவது மதுவையே ஆகும். மதுவினால் பெருமளவு பாதிக்கப்படும் சமுதாயம் அடிதட்டு உழைப்பாளர் சமுதாயமே இந்த உழைப்பாளிகள் உழைப்பின் அலுப்பு தீரவே குடிக்கிறார்கள். இருப்பினும் மற்ற சமுதாயத் தொழிலாளிகளைப் போலவே பெண்களைத் துன்புறுத்துவதையும் கைக்கொண்டிருக்கின்றார்கள்.

“புருஷன் இன்னோரு பொம்பிளகிட்டப் போயிரக் கூடாதுண்டுதா எல்லாப் பொண்டுவளும் இப்பம் அவளவுளுவளே சாராயம் வாங்கி வந்து வக்கிறாளுவ”[2]

என்ற கூற்றின் வழியே இராஜம் கிருஷ்ணன் பெண்களின் இழிவைப் புலப்படுத்துகிறார்.

குடித்து விட்டு அடிக்கும் கணவனிடம் எத்தனை நாட்கள் தாம் உறவு பற்றியிருக்கும். மடி நிறையப் பணத்துடன் கடற்கரைப் பகுதிகளில் உலாவும் முதலாளிகள், இளவயது பெண்களின் ஆசைகளை அறிந்து அவர்களுக்குத் தூண்டில் போடத்தான் செய்வார்கள். பணமுதலைகளுக்கு இரையாகும் பெண்களை,

“வராதே கிட்ட.... கொன்னிடுவேன் வெக்கங் கெட்ட மூதி”[3]

என்று ஆண்கள் துன்புறுத்துவதை ‘அலைவாய்க் கரையிலே’ நாவலில் இராஜம் கிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் இந்தக் கடற்கரை மனிதர்கள் அநீதிகளை எதிர்த்து போராடுமளவுக்கு வலிமை பெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அதே சமயம் உணர்ச்சிகளுக்குத் தாறுமாறாக இடம் கொடுத்து வலிமை இழந்தும் சீர்குலைகின்றனர் என இருநிலைகளில் அவர்களின் வாழ்வியலைப் பிரதிபலித்துள்ளார்.

## உப்பளத் தொழிலாளர்

உப்பு உற்பத்தி செய்யப்படும் தூத்துக்குடியைச் சார்ந்த கடற்கரையே ‘கரிப்பு மணிகள்’ புதினத்தின் களமாக அமைந்துள்ளது. கண்களுக்கு எட்டிய தொலைவுக்கு பசுமையற்ற உயிர்ப்பின் வண்ணங்களற்ற வெண்மை பூத்துக்கிடக்கும் உப்புப் பாத்திகளில் காலையிலிருந்து மாலை வரையிலும் கந்தலும் கண்பீளையுமாக சிறுவர் சிறுமியர், ஆண்கள், பெண்கள் என்று வேலை செய்யும் நிலையை,

“விரிந்து பரந்த பாத்திகளுக்குச் செய்நேர்த்தி செய்யும் கால்கள் அனைத்தும் மனிதக் கால்கள், நீரும் காரியும் மலும் குழம்பக் குழம்பி மனித ஆற்றலின் வெம்மைகளும் மண்ணின் உட்சூடும் கொதித்து ஆவியாகிப் போகும் ‘செய்ரத்து’ கருவைக்காட்டு உப்பளத்திலும் நடக்கிறது. அந்தப் பாதங்கள் கறுத்துக் கன்றிப் புண்பட்டுத் தேய்ந்தாலும் இன்னும் ஆற்றலைக் காக்கும் இயக்கங்கள் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும்”[4] என்று கரிப்பு மணிகள் புதினத்தின் வழியே காட்டுகிறார்.

தொழிலாளர்களில் பெருமளவு பாதிக்கப்படுவது பெண்கள், “எத்தனையோ பெண்கள்-தொழிற்களத்தில் தேய்ந்து, குடும்பத்துக்கும் ஈடுகொடுக்கும் புண்ணில் எரிய எரியத் தடவிக்கொண்டு, அந்த எரிச்சலிலேயே உறங்கி மீண்டும் புண் வலுக்கப் பணியெடுக்க வரும் பெண்கள்” என்ற வரிகளின் வழியே விளக்கப்பட்டுள்ளது. கங்காணி என்ற இடைத்தரகர்களாலும், முதலாளிகளாலும் வயிற்றுப் பிழைப்புக்காக வரும் பெண்கள் சீரழிக்கப்படுகின்றனர். இம்மாதிரியான சூழலில் மரணமும் அவர்களுக்கு மரத்துப் போன உணர்வாகவே இருந்துள்ளது.

உப்பளத்தில் கருகும் குழந்தைகள் பற்றிய நிலை, வெளி உலகமும் அறிய வேண்டும். அவரவர் உழைப்புக்கு உரிய ஊதியம் வழங்கப்பட வேண்டும். உணவு, மருத்துவம், கல்வி, பாதுகாப்பு உகந்த முறையில் செய்யப்படல் வேண்டும் என்பதே ராஜம் கிருஷ்ணனின் விருப்பமாகும்.

## தீப்பெட்டித் தொழிலாளர்

'கூட்டுக்குஞ்சுகள்' புதினத்தில் குழந்தைத் தொழிலாளர் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குப் பணிக்குச் செல்வதற்கு வறுமையே காரணம் என்கிறார் ராஜம்கிருஷ்ணன். யானைக்கொட்டடி போல் விரிந்திருக்கும் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்யும் குழந்தைகளின் நிலையை "அங்கே உட்கார்ந்து குச்சியடுக்குபவர்கள் யாருக்குமே பெற்றோரின் பாசம் தெரியாது. தாயின் வயிற்றில் உருவாகும்போதே பசி என்ற ஒரே தேவையின் பூதாகார வடிவில் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கான ஆசை உந்துதல்கள் எப்போதும் கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கும்" என்று படம் பிடித்துக் காட்டுகிறார்.

கனவுலகில் மிதந்து கொண்டிருந்த ஒரு கள்ளமற்ற குழந்தையின் சுதந்திரம் சட்டென்று அழுத்தப்பட்டதையே இச்சம்பவம் எடுத்துரைக்கின்றது.

மற்றத் தொழிற்களங்களைப் போலவே தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் உழைப்பின் பொருட்டுச் செல்லும் பெண்கள் அங்கு பணிபுரியும் ஆண்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர். வாழ்வின் வறுமைக் காரணமாகப் பெரும்பாலான பெண்கள் இதனை எதிர்க்கத் துணிவில்லாமல் அமைதியாக இருந்து விடுகின்றனர்.

"இவனுவ சோப்பு வாங்கிக் கொடுக்கிறதும், பவுடர் வாங்கி குடுக்கிறதும், இப்படி சமயம் வாய்க்கிற போது வசப்படுத்துறதும் கண்ணால் பார்க்கிறேன், வயித்துக் கில்லாம வந்து விழுதுங்க"[5]

என்ற சலிப்பான கூற்றே இப்பெண்களின் வாழ்க்கை அவலத்தை விளக்குவதாக உள்ளது.

## அலுவலகப் பணிமகளிர்

பொருளாதாரம் என்ற படிநிலை வளர்ச்சியில், கற்புக் கோட்பாடு என்ற தளையால், பெண்களைச் சிதைக்கவும் சிறுமைப்படுத்தவும் ஆண்களின் ஆதிக்க உணர்வு முயல்கிறது. ஆயினும், முன்னெப்போதையும்விட, இத்தளைகளில் சிக்குண்டு, சிதைவிற்குள்ளாகாமல், எதிர்த்துப் போராடவும் நிமிர்ந்து நின்று வாழ்ந்து காட்டவும், தளைகளை அறுத்துக் கொண்டு வரவும், கூடிய விழிப்புணர்வை ராஜம்கிருஷ்ணனின் புதினங்கள் மிகுதியாக எடுத்துரைத்துள்ளன.

காட்டிற்குள்ளாகச் சுருங்கிப் போகும் நத்தைகளாக இல்லாமல் துணிந்து எதிர்த்து நிற்கின்றனர் இப்பெண்கள்.

"உங்களுக்கு என்னை விலக்க ஒரு அதிகாரமும் கிடையாது. சட்டப்படி போனால் கூட நான் பட்டுபட்டுனு உள்ளதை உள்ளபடி சொல்வேன். எந்த வக்கீல் வேணும்னாலும் பாருங்க, என்னை விலக்க ஒரு காரணமும் இல்லைன்னு சொல்லுவாங்க"[6]

என்ற ராஜம் கிருஷ்ணனின் 'வேருக்கு நீர்' புதின நாயகியான யமுனா உரைப்பதிலிருந்து இவ்வுண்மை விளங்கும்.

இரு குழந்தைகளுக்குத் தாயான கணவனைப் பிரிந்து வாழும் சாருவிடம், அவள் குடியிருக்கும் வீட்டின் உரிமையாளர் தவறாக நடக்க முயல்வதாகவும், சாரு அதை எதிர்ப்பதாகவும் 'ஆண்களோடு பெண்களும்' நாவலில் இராஜம் கிருஷ்ணன் சுட்டுகிறார். தனிமையில் எதிர்த்து நிற்கும் பெண்களிடம் இதைப் பற்றிப் பேசிப் பார்த்து, எதிர்த்து நிற்பது கண்டால் அடங்கி விடுவார்கள். எனவே எதிர்த்து நின்று போராடும் பண்புதான் வளரவேண்டும் என்பது இன்று தேவையான, வலுவான சிந்தனையாகும்.

## மக்கள் தொடர்பு சாதனங்களில் மகளிர்

பத்திரிகை, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை பெண்களை வெறும் கவர்ச்சிப் பதுமைகளாகவும் இன்ப நுகர்வுப் பொருளாகவும் தவறான பிம்பங்களாகவும் காட்டுவதைப் பெண்கள் எதிர்க்கின்றனர். இந்த ஆரோக்கியமற்ற போக்கை பெண்ணியவாதிகள் அழுத்தமாகவே சுட்டியுள்ளனர். இத்தகைய இழிவுபடுத்தும் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற விழிப்புணர்வை இராஜம்கிருஷ்ணன் அழுத்தமாக எடுத்துள்ளார்.

'ஓசைகள் அடங்கிய பிறகு' என்ற நாவலில் பத்திரிகையின் அட்டைப் படத்தில் தம் படம் வரவேண்டும் என்று பெண்களே ஆசைப்படும் நிலையைக் காட்டுகிறார்.

"மீனா நீ ரொம்ப லக்கீடீ, எங்க சுமிக்குத்தான் இப்படி அட்டைப்பட அழகியாகணும்னு ஆசை. அதுக்காகப் போட்டி வச்சாங்களே, அதுக்குக் கூட எழுதி விட்டா"[7]

என்ற வரியில் இதனைச் சுட்டுகிறார்.

பெண்களைப் போகப் பொருளாகக் காட்டுவதையும் அதன் பாதிப்பால் ஈர்க்கப்பட்டுச் சின்னஞ்சிறு பெண்கள் கூட திரைப்பட ஆசையில் வீட்டை விட்டு ஓடி மாயச் சூழலில் சிக்சிச் சீரழிவதை 'மானுடத்தின் மகரந்தங்கள்' என்ற நாவல் சுட்டியுள்ளது.

"இந்த சினிமா, கண்ட பத்திரிகைகள், போஸ்டர்கள், இதெல்லாம் இன்னிக்கு இவளைப் போல் பெண்ணுங்களைப் புடிச்சி பேயாட்டம் ஆட்டறது" என்று வரும் உரையாடல் இதை எடுத்துக்காட்டும். இவ்விழிவுபடுத்தலை எதிர்த்துப் பெண்கள் விழிப்புணர்வு பெற்றுப் போராட வேண்டும் என்பதே பெண்ணியலாளர்களின் எண்ணமாகும்.

## முடிவுரை

பயிர்த்தொழில் புரியும் மக்களைப் பற்றியும், களத்தில் பணிபுரியும் உழைக்கும் மகளிரின் சிக்கல்களையும், காலையிலிருந்து மாலை வரை உப்பளத்தில் கருகும் தொழிலாளர்களின் வறுமை மற்றும் பாட்டாளிப் பெண்களின் அவலமும், சிறுபிள்ளைகள் தீப்பெட்டித் தொழிலகங்களில் படும் வேதனை நிலையையும், கல்வி கற்று பொருளாதார சார்பின்றித் தனித்து நிற்கும் அலுவல் மகளிரின் பொருளாதார சுயசார்பும், பாலியல் ரீதியான சிக்கல்களையும், மிக நேர்த்தியாக பதிவு செய்துள்ளார் இராஜம் கிருஷ்ணன். மக்கள் தொடர்பு சாதனங்களில் பெண்களுக்கு விழிப்புணர்வு தேவை என்பன போன்ற செய்திகள் இராஜம்கிருஷ்ணனின் புதினங்களின் வழி அறியமுடிகின்றன. தற்காலப் பெண்களுக்கும் பெண்ணிய எழுத்தாளர்களுக்கும் சமூகத்தைத் திறம்பட எதிர்கொள்ள களம் அமைத்துத் தந்தவர் இராஜம் கிருஷ்ணன்.

## References


இராஜம் கிருஷ்ணன், (1978) அலைவாய்க் கரையிலே

இராஜம் கிருஷ்ணன், (1982), ஓசைகள் அடங்கிய பிறகு

இராஜம் கிருஷ்ணன் (1979), கரிப்பு மணிகள்

இராஜம் கிருஷ்ணன், (1980) கூட்டுக்குஞ்சுகள்

இராஜம் கிருஷ்ணன், (1984), மானுடத்தின் மகரந்தங்கள்

இராஜம் கிருஷ்ணன் (1973) வேருக்கு நீர்



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License